செ.வெ.எண்: 23 நாள்: 13.07.2020

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் ஊரடங்கு உத்தரவு அமலுப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, மாவட்ட நிர்வாகத்தின் மூலம் கொரோனா வைரஸ் தடுப்பு நடைவடிக்கைகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி அரியலூர் மாவட்டத்தில் உள்ள அரியலூர் நகராட்சி, ஜெயங்கொண்டம் நகராட்சி ஆகிய நகராட்சி பகுதிகளில் அனைத்து வீடுகள் மற்றும் கடைகள், பொது இடங்களில் கிருமி நாசினி தெளிக்கும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கூட்டுறவுத்துறையில் பணிபுரியும் பணியாளருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதைத்தொடர்ந்து, மாவட்ட ஆட்சியரகத்தில் தொடர்ந்து மூன்று நாட்கள் சுத்தப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது. இதனைத்தொடர்ச்சியாக அலுவலகத்தில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களுக்கும் சுகாதாரத்துறையின் மூலம் கொரோனா தொற்று பரிசோதனை எடுக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இன்று (13.07.2020) 89 நபர்களுக்கு கொரோனா பரிசோதனை எடுக்கப்பட்டது. தொடர்ந்து கொரோனா தொற்று பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

பொதுமக்கள் அனைவரும் சமூக இடைவெளியினை கடைபிடித்து, வெளியில் வரும்போது கண்டிப்பாக முககவசம் அணிந்து வர வேண்டும். எனவே, பொதுமக்கள் தமிழ்நாடு அரசு கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளுக்கு எடுக்கப்பட்டு வரும் அனைத்து நடவடிக்கைகளுக்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும் முழு ஒத்துழைப்பு வழங்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**